செ.வெ. எண்: 199 நாள்: 13.03.2012

# கோ–ஆப்டெக்ஸின் முத்தான இரண்டு திட்டங்கள்

" கோ–ஆப்டெக்ஸ்" என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், வரும் 02.04.2012 அன்று வெற்றிகரமாக தனது 78வது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது.

கைத்தறியின் மேல் ஈடுபாடு கொண்ட பொது மக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வழங்கி வரும் பேராதரவின் காரணமாகவே கோ–ஆப்டெக்ஸ் இத்தகைய சாதனையை எய்த முடிந்தது மட்டுமின்றி இந்தியாவிலேயே கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் மிகப் பெரிய தலைமைச் சங்கமாகவும் திகழ்ந்து வருகின்றது.

கோ–ஆப்டெக்ஸ் துவக்க தினமான ஏப்ரல் 2ஆம் நாளினை, வாடிக்கையாளர்களுடன் இணைந்து கொண்டாடும் விதமாக, முதன் முறையாக, **"கைத்தறித் துணிகள் 2 வாங்கினால் 1 இலவசம்"** என்ற இந்த புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது. இது மட்டுமின்றி, ரூ.1,999/– மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் வாங்கினால் 20% தள்ளுபடியும் , ரூ.2,000/–முதல் ரூ.4,999/– வரை மதிப்பிற்கு துணிகள் வாங்கினால் 25% தள்ளுபடியும், ரூ.5,000/– மதிப்பிற்கு மேலாக துணிகள் வாங்கினால் 30% தள்ளுபடியும் வழங்கப்பட உள்ளது. இச்சலுகைகள், வரும் 17.03.2012 முதல் 02.04.2012 வரை அனைத்து கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் வழங்கப்படும். இந்த விற்பனை காலத்தில், கோ–ஆப்டெக்ஸின் அனைத்து விற்பனை நிலையங்களும், விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**